08.01.2024



<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.137/2017</u>

<u>வா.சா. 1–சரோஜா, க/பெ. மாணிக்கம்</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

2ம் வாதி எனக்கு பெரிய மகள், 3ம் வாதி என்னுடைய கடைசி மகள். என்னுடைய கணவர் பெயர் மாணிக்கம். என் கணவருடன் உடன்பிறந்தவர்கள் துரைசாணி, சந்திரா, அன்பழகன், பானுமதி ஆகியோர்கள் ஆவார்கள். என் மாமனார் பெயர் அழகிரிசாமி. அழகிரிசாமியுடன் பிறந்தவர்கள் ராமசாமி மற்றும் ரெங்கராஜ் ஆகியோர்கள் ஆவார்கள். அழகிரிசாமியின் தகப்பனார் பெயர் வெங்கட்ராமன் (எ) வெங்கிடுசாமி ஆகும். உங்கள் கணவருடன் உடன் பிறந்தவர்கள் இருக்கும் போது இந்த வழக்கை உங்கள் கணவருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று தான் இந்த தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் சொன்ன விவரத்தை தான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன். நீங்கள் வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்களை விட கூடுதலாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்குரையில் டவுன் சர்வே எண். 357/289 தான் குறிப்பிட்டுள்ளேன்,

08.01.2024



புதிய டவுன் சர்வே எண் வழங்கப்படவில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் 420 அடி. தென்வடல் 30 அடி, கிழமேல் 14 அடி ஆகும்.

(வாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.